# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**


<u>ஆணை நாள்</u> <u>10.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 9016/B/19</u>**

| | | |
|---|---|---|
| திரு ரா. அய்யப்பன் | | மேல்முறையீட்டாளர் |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகம்,<br>தூத்துக்குடி மாவட்டம். | எதிர் | பொது அதிகார அமைப்பு |

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு ரா. அய்யப்பன் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு காளிராஜ், தலைமை சர்வேயர், கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 01.05.2019 தேதியிட்ட மனுவில், Sub-dividion patta வேண்டி 27.03.2018 அன்று கொடுக்கப்பட்ட தனது மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் தொடர்பாக கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 15.07.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 10.09.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் அவர்கள் தகவல் வழங்கப்படவில்லை என்றும், தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார். தொலைபேசியின் வாயிலாக, மேற்படி பொது தகவல் அலுவலரை தொடர்பு கொண்டபோது, பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் இன்று மாலைக்குள் மனுதாரருக்கு தகவல்களை வழங்கிவிடுவதாக விசாரணையின்போது தெரிவித்தார். மேற்படி பொது தகவல் அலுவலர் தெரிவித்தவாறு, மனுதாரருக்கு தகவல் வழங்கிவிட்டு, மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவலின் நகலை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளதன் அடிப்படையிலும், இதற்கிடையில் ஆணையத்திலிருந்து தொலைபேசியின் வாயிலாக மனுதாரரிடம் தகவல்கள் கிடைக்கப்பெற்றதா என்று

கேட்டபோது, அதற்கு மனுதாரர் தான் கோரியுள்ள தகவல்கள் தனக்கு கிடைக்கப்பெற்றது என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9016/B/19**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்.

திரு ரா. அய்யப்பன்,
6/471 ஸ்ரீநிவாசநகர்,
கோவில்பட்டி 628 502.

Copy to: File
SCPA-12.11.20